*கவனிக்க.- 01.04.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1701 - 2011 අප්‍රේල් මස 08 වැනි සිකුරාදා - 2011.04.08

*1701 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 440 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 444 |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2011, ஏப்பிறல் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***லக்ஷ்மன் குணவர்தன,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந்திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை வான்படை

*அரசாணையமர்வுஅலுவலர் வெற்றிடங்கள்*

இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் பரிபாலன நீதிப் பிரிவில் ஆண் பிரதான நீதி அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன :

2. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்ப தாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

***பரிபாலன நீதிப்பிரிவு :***

*தலைமை நீதி அதிகாரி - நிரந்தர/தொண்டர் :*

வழக்கறிஞராக பட்டம் பெற்றிருப்பதுடன் வழக்கறிஞராக 15 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

3. **வேறு தகைமைகள் :**

(அ) *தேசிய இனம்.*- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்

(ஆ) *குடியியல் நிலை.*- விவாகமானவர்/விவாகமாகாதவர்

(இ) *வயது.*- 2011.05.15 ஆந் திகதிக்கு வயது 45 இற்கு கூடாதிருத்தல் வேண்டும்

(ஈ) *உயரம்.*- 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும்

(உ) *மார்பு.*- 32" (குறைந்தது)

(ஊ) *தொலைபார்வை.*- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடியுடன் அல்லது மூக்குக்கண்ணாடி பயன்படுத்தப் படாமல்)

4. தேவையான உயரம், நிறை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

5. வான்படை ஆளுனரால் நியமிக்கப்படும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

6. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

7. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்.**- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வுநாடிகள் இலங்கைக் குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவ தற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன் பின்னர் ஆக்கப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப் படுத்தப்படுவர்.

8. தகைமைகளையும் அனுபவத்தையும் பொறுத்து தெரிவுசெய்யப் படும் விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை வான்படையில் நிரந்தர தொண்டர் நிலைகளில் குரூப் கெப்டன் அல்லது எயார் கொமடோர் தரத்தில் ஆணைபெற்ற பதவி வழங்கப்படும்.

9. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரினால் தீர்மானிக்கப்படும் காலங்களில் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படுத்தப் படுவார்கள். பயிற்சிக் காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப்பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

10. வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப்படு கிறார்கள்.

11. இலங்கை வான்படை ஆணைபெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிறல் 27 ஆந் திகதிய 10, 240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உப சேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அலுவலர் ஒருவருக்கு பைலற் ஒபிசர் அல்லது ஏற்புடைத்தாயின் அதைவிட உயர்ந்த தரத்தில் நிரந்தர ஆணைபெற்ற பதவி வழங்கப்படும். வான்படைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி "அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்." ஆயின் ஒருதலைப்பட்சமாக தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்குக் கிடையாது. ஆனால் வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதியளிக்கப் படலாம். பயிற்சி மற்றும் அதைத் தொடர்ந்த கற்கைநெறிகள் தொடர்பிலான கட்டாய சேவைக்காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்படமாட்டார். வான்படையிலிருந்து ஓய்வுபெறுவது வான்படை ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப்பின் ஏற்புடையதாகும்.

12. அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்த நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

13. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

14. திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 15 (ஆ), (16) ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ள வாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

15. (அ) இலங்கை வான்படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :

குறூப் கெப்டன்- : ரூபா 4,41,060-18 x 12,600 = ரூபா 6,67,860

எயார் கொமடோர்- : ரூபா 4,66,260-16 x 12,600 = ரூபா 6,67,860

(ஆ) வேறு கொடுப்பனவுகள் :

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 5,250 ;

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250 வீதம் வழங்கப்படும் ;

(3) கடினப்படி மாதமொன்றுக்கு ரூபா 600 ;

(4) விசேட கொடுப்பனவு யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 5,000 ;

(5) விசேட கொடுப்பனவு ரூபா 3,000 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதம் வழங்கப்படும் ;

(6) மேலதிகக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 1,000 ;

(7) சீருடை பேணுதல் படி (மாதமொன்றுக்கு ரூபா 255);

(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 10,609.75 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடிய ரூபா 637.50 வரை) ;

(11) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், மனைவிக்கும் பிள்ளைகளுக்கும்) ;

(12) அதிகாரி விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப் பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணச் செலவின மீளளிப்பு ;

(13) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும் ;

(14) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடைத்தாயின் குடும்பத்தினருக்கும்) ;

(15) திருமணமான அலுவலருக்கு (வெளியிலிருந்து வசிக்க அனுமதிபெற்றிருந்தால்) தொழில் புரியும் இடத்திலிருந்து வதிவிடம் வரை பயணம் செய்வதற்கு வசதிகள் வழங்கப்படும் ;

(16) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் (பைலற் ஒபீசர் இலிருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,850 இலிருந்து ரூபா 4,250 வரை) வாடகைப்படிகள் கொடுப்படற்பாலனவாகும்.

16. ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவு என்பன காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச்சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படுமாகும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

17. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**.- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2011.04.15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "தலைமை நீதி அதிகாரிகளுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை, வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பகாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் /சபையின்/குடியியல்தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த பிரிவுக்கு தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் ;

(3) விண்ணப்பதாரரை நன்கு அறிந்தவரான பொறுப்புவாய்ந்த இருவரிடம் இருந்து அண்மையில் பெற்ற இரு குணநலச் சான்றிதழ்கள் ;

(4) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(5) விண்ணப்பக்காரருக்கு உரித்தான வேறு சான்றிதழ்கள்.

**குறிப்பு**.- சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பதாரிகள் முதலாம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்பொழுது கட்டாயமாக வைத்திருத்தல் வேண்டும்.

18. விண்ணப்பத்தில் கூற்று எதுவும் பிழையானதெனக் காணப்படுமிடத்து, தெரிவுசெய்யப்படுமுன் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பகாரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவு செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

19. **தெரிவுசெய்தல் நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனையைப் பூர்த்திசெய்பவர்களுள் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரின் பணிப்பிற்கிணங்க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச்சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப்படும்.

(ஆ) நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதி தெரிவுசெய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும் இடம், நேரம், திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்பட மாட்டாது.

(இ) விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும் ;

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் ;

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபார்சு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டா.

எச். டி. அபேவிக்ரம,
எயர் மாஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர வான்படை**

*இலங்கை நிரந்தர தொண்டர் வான்படையில் பரிபாலன நீதிப் பிரிவில் அரசாணைபெற்ற அலுவலர் பதவிக்கான (தலைமை நீதி அதிகாரி) விண்ணப்பம்*

1. தேசிய இனம் :----.

   (இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக.) :

2. முழுப்பெயர் :----.

   (தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு)

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

4. விண்ணப்பிக்கும் பிரிவு :----.

5. நிரந்தர முகவரி :----.

6. நிரந்தர முகவரியில் அண்மையிலுள்ள பொலிசு நிலையம் : ----.

7. அஞ்சல் முகவரி

8. பிறந்த திகதி :----.

9. உயரம் :

10. மாவட்டம் :----.

11. தேர்தற் தொகுதி :----.

12. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

13. தொலைபேசி இலக்கம் :----.

14. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.

15. பாடசாலை அத்துடன்/அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் : ----.

| பாடசாலை/ சர்வகலாசாலை பெயர்கள் | பரீட்சையின் தன்மை | ஆண்டு | பொதுப் பாடசாலை களும் சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா./த.)<br>க.பொ.த. (உ./த.)<br>தொழில்சார் தகைமைகள்<br>வேறு | | |

16. பாடசாலை/பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் (தேவையாயின்) :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப்பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

17. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை : | | | |
| தாய் : | | | |

18. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

19. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----. (குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக) :----.

20. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

21. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை : ----.

22. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தாராயிருப்பின் விபரங்களையும் அத்தகைய விண்ணபத்தின் பேற்றினையும் தருக :----.

23. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப் பட்டவராயிருப்பின் அல்லது பிணையில் விடப்பட்டவராயிருப்பின் விபரங்கள் தருக : ----.

24. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/சபையில்/கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/தேசிய வங்கி/பல்கலைக்கழகங்கள்/அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் : ----.

25. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

26. விண்ணப்பகாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத்துகை.- மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத் துள்ள விடைகள் யாவும் என் அறிவிற்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்ப தாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

----,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :----.

4-279

---

திருத்தம்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - இரத்தினபுரி மாவட்டம்

**இரத்துச்செய்யும் அறிவித்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2011.04.01 ஆந் திகதிய 1700 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) வில் என்னால் பிரசுரிக்கப்பட்டதான பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பதவிக்கான விண்ணப்பம் கோரல் அறிவித்தல் (இல. 4-57) இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றது.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் |
|---|---|---|
| இரத்தினபுரி | இம்புள்ளே | இம்புள்ளே பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கடவத்த மற்றும் மதகோரளைப் பிரிவில் விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2011, பங்குனி மாதம் 24 ஆந் திகதி.

4-352

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - இரத்தினபுரி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, வைகாசி மாதம் 09 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2011, பங்குனி மாதம் 24 ஆந் திகதி.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| இரத்தினபுரி | கிரில்லா | பொதம்பே பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் குருவித கோறளை விவாகப் (கண்டிய, பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், இரத்தினபுரி |

4-351

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை-2011

இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2011 யூலை மாதம், நகர இல. 1 கொழும்பு மற்றும் நகர இலக்கம் 2 யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடாத்தப்படும். விண்ணப்பப் படிவத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் நகரம் பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2011.05.06 ஆந் திகதி என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

2. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான மாதிரி விண்ணப்பப் படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. அந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரி தனது விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பப் படிவம் A4 அளவிலான கடதாசியில் மாத்திரமன்றி வேறு எந்தக் கடதாசியிலும் தயாரிக்கப்படலாகாது. இலக்கம் 01 தொடக்கம் 04(ii) வரையில் முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலுமாக தயாரித்துக்கொள்ளல் வேண்டும். அதனை விண்ணப்தாரர் தனது கையெழுத்துக்களினால் நிரப்புதல் வேண்டும். மேலும் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படும்போது அங்கே தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப் படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் இல்லாத விண்ணப்பப்படிவங்களும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் மற்றும் பூர்த்தி செய்யப்படாத தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் இரண்டிற்கும் தோற்றுவதற்கு எதிர்பார்ப்பதாயின் அதுபற்றி சரியாக குறிப்பிட்டுள்ள இரண்டு விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தில் மேலே உள்ள தகவல்களை உரிய முறையில் 7(i) அல்லது (ii) தகவல்களை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். மேலும், இந்த இரண்டு பரீட்சைகளுக்கும் பரீட்சைக் கட்டணம் தனித்தனியாகச் செலுத்தி இரண்டு பற்றுச்சீட்டுக்களைப் பெற்று தனித்தனியாக ஒட்டுதல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் ஒத்ததாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடில் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும்.

3. விண்ணப்பப்படிவங்கள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக (பிரதேச செயலகங்களாயின் பிரதேச செயலாளரின் ஊடாக) 2011.05.06 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பத்தரமுல்லை, பெலவத்தை, ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் என்பதுடன் விண்ணப்பப் படிவம் இடப்படும் கடித உறையின் இடது மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

விண்ணப்பப்பத்திரத்தின் போட்டோ பிரதியொன்று தம்மிடம் வைத்துக்கொள்ளுதல் பிரயோசனமானதாக இருக்கும். பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும் என்பதுடன் விண்ணப்பித்த மொழி பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது. அரச கரும மொழிக் கொள்கை பற்றிய விடயம் தொடர்பாக புதிய பிரவேச உத்தியோகத்தர்களினால் தமது விண்ணப்பம் அரச கரும மொழியில் அல்லது தாம் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழியின் பிரகாரம் தமிழ் மொழியில் அல்லது ஆங்கில மொழியில் தயாரித்துச் சமர்ப்பிக்கப்படலாம்.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கால அட்டவணைப் பிரதியொன்றுடன் அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டவுடன் அதுபற்றி குறிப்பிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கழிந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு அப்பால் உள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்பிவைக்கக்கூடிய தொலைநகல் முகவரியொன்றும் குறிப்பிடப்பட்ட உங்களது வேண்டுகோள் கடிதத்தை இலங்கை பரீட்சை ஆணையாளருக்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக விருக்கும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;
(iii) பூரணமான முகவரி ;
(iv) விண்ணப்பப் படிவம் தபாலில் இடப்பட்ட தபாற்கந்தோர், பதிவு செய்த இலக்கம் மற்றும் திகதி.

5. **ஆளடையாளம்**.- விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற எல்லா விடயங்களின்போதும் பரீட்சை மண்டப அதிபதிக்கு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்கென கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களிடையே ஒன்று மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

மேற்கூறப்பட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்க இயலாத விண்ணப்பதாரி ஒருவரின் பரீட்சார்த்தித் தன்மையை நிராகரித்தல் அல்லது ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கு பரீட்சைகள் ஆணையாளருக்கு அதிகாரமுண்டு.

6. **பரீட்சைக் கட்டணம்**.- இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சை விண்ணப்பதாரர்களிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும் :-

(அ) முதலாவது தடவைக்கு இரண்டு வினைத்திறன்காண்தடைப் பரீட்சைகளுக்கும் கட்டணம் அறவிடப்படமாட்டாது ;
(ஆ) முதலாவது தடவையின் பின்னர் ஒவ்வொரு வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்காகவும் ரூபா 400.00 வீதம் அறவிடப்படும் ;
(இ) ஒரு விடயத்துக்கு ரூபா 150.00 அறவிடப்படும்.

உரித்துடைய பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளரின் வருமானத் தலைப்பு இல.2003.02.13 இற்கு வரவிலிடப்படக்கூடியதாக நாட்டிலுள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலேனும் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்தில் உரிய இடத்தில் அதன் ஓரத்தைக் கழன்று போகாத வகையில் ஒட்டவும். பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்று தம்மிடம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமானதாக இருக்கும். வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணத்தைத் தனித்தனியே செலுத்திய இரண்டு பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டு உரிய விண்ணப்பப் படிவங்களில் ஒட்டுதல் வேண்டும்.

7. இப்பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப்படும் என்பதுடன் அவரினால் பரீட்சை நடாத்தப்படுதல் தொடர்பாக விதிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்படுத்தப்படுவர். இந்த வர்த்தமானிப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (II அ) யின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ள "பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்" இப்பரீட்சைக்கும் உரித்துடையதாகும். பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டப அதிபதிக்கு தங்களது கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்ட பிரவேசப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை உள்ள மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிட அட்டையொன்று வழங்கப்பட்டுள்ள தங்களது திணைக்கள/அலுவலகங்களிலுள்ள உத்தியோகத்தர்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு திணைக்கள/அலுவலக தலைவர்களினால் கடமை லீவு வழங்கப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அனுப்பிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படுவதுடன், பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை ஒன்றினை வழங்குதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளாரென ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதக்கூடாது.

9. இந்த ஒழுங்குவிதிகளில் அடங்கியில்லாத ஏதேனும் விடயமொன்று இருப்பின் நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் தற்றுணிபின்படி அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

10. முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையுடன் தொடர்புடைய விடயப்பரப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் விடயப் பரப்பு

முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை பின்வரும் விடயங்களைக்கொண்டு காணப்படும் :-

(i) திட்டமிடல் எண்ணக்கருக்கள், விதிநுட்பங்கள், மற்றும் திட்டமிடல் நிறுவனங்கள் (விடய இல. 01) - 100 புள்ளிகள்

(ii) பொருளாதார பகுப்பாய்வு மற்றும் புள்ளி விபரம் (விடய இல. 02) - 100 புள்ளிகள்

(iii) செயற்திட்டங்களைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், பின்னூட்டல் (விடய இல. 03) - 100 புள்ளிகள்
(iv) தாபன ஒழுங்குவிதிகள் மற்றும் அரச நடைமுறைப்படுத்தல், பின்னூட்டல் துறையின் நிதித்திட்டம் (விடய இல. 04) - 100 புள்ளிகள்
(v) ஆங்கில மொழி (விடய இல-05) - 100 புள்ளிகள்

(2). அனைத்துப் பாடங்களுக்கும் ஒரே முறையில் அல்லது தனித்தனியாக பல முறைகளில் தோற்றுவதற்கு உத்தியோகத்தர் ஒருவருக்கு அனுமதி உண்டு.

(3). ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்கும் காலம் : 03 மணித்தியாலங்கள்

(4). வினாப்பத்திரத்திலுள்ள அனைத்து வினாக்களுக்கும் கட்டாயமாக விடயளித்தல் வேண்டும்.

(5). சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளையோ அல்லது அதற்கு மேலே பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

11. **பரீட்சை ஒழுங்குவிதிகள்.- *முதலாவது வினாத்தாள்*.-** திட்டமிடல் எண்ணக்கருக்கள் மற்றும் முன்னுரிமைகள், விதிநுட்பங்கள், திட்டமிடல் நிறுவனங்கள் :

(i) தேசிய குறிக்கோள்கள், முன்னுரிமைகள் மற்றும் அவற்றைச் சாத்தியப்படுத்திக் கொள்வதற்கான கொள்கைச் சட்டகம் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்.

(ii) தேசிய திட்டமிடலுக்கான விதி நுட்பங்கள், திட்டமிடலில் உள்ள பிரதான சிக்கலான இடங்கள், பொது மக்களின் ஒத்துழைப்பு வளங்களைப் பயன்படுத்தல்

(iii) தேசிய திட்டமிடலுக்கான தரவுகளின் தன்மை மற்றும் மூலம், தரவுகள் சேகரித்தல், பொருள் கோடல்களைச் சமர்ப்பித்தல் மற்றும் பகுப்பாய்வு, துறை சார்ந்த பரிசோதனை மற்றும் ஆய்வு, பொது ஊடக எண்ணக்கரு, பொருளியல் ஆய்வு மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு.

***இரண்டாவது வினாத்தாள்*.-** பொருளாதார பகுப்பாய்வு மற்றும் கணக்கிடல் :

(i) உற்பத்தி மற்றும் விநியோகம் பற்றிய நியதிகள்மீது விசேட கவனத்துடன் பொருளியல் மூலதர்மங்கள்

(ii) பணம், வங்கி அமைப்பு, சர்வதேச நிதி அமைப்பு மற்றும் வியாபாரம்

(iii) நிதி, பணம், வியாபாரம் மற்றும் தீர்வை வரிக் கொள்கைப் பகுப்பாய்வு

(iv) இலங்கையில் பொருளாதாரக் கட்டமைப்பு

(v) பொருளாதார மீளாய்வு

(vi) கலைப் பயிற்சி மற்றும் பயிற்றப்படாத மனித சக்தி மற்றும் வெளிநாட்டு உதவி உட்பட்டதாக ஏனைய வளங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் அவற்றைப் பயன்படுத்தல்.

(vii) பொருளாதார விஞ்ஞான மற்றும் சமூக ரீதியான நிகழ்வுகள்

(viii) பொருளாதார பகுப்பாய்வு மற்றும் திட்டமிடலில் பயன்படுத்தப்படும் ஆரம்ப கணக்கிடல் கொள்கைகள் மற்றும் திட்டங்கள்.

(ix) பயன் விளைவுகள்/செலவினப் பகுப்பாய்வு மூலதர்மங்கள்

***மூன்றாவது வினாத்தாள்*.-** கருத்திட்டங்களைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் பின்னூட்டல் :

(i) கருத்திட்டங்களைத் திட்டமிடல், இனங்காணல், பொருள் கோடல் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்கல், கொள்கைகள், சித்தாந்தம், இடத்தைத் தெரிவு செய்தல் தொழில்நுட்பம், செலவினம் மற்றும் பயன் விளைவுகள், மதிப்பீடு செய்தல் தொழில்நுட்ப நிதி மற்றும் பொருளாதார பகுப்பாய்வு.

(ii) கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு முறையாகவும் உரிய காலத்திலும் நடைமுறைப்படுத்தல், விரிவான செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தும் அட்டவணை தயாரித்தல், பின்விபரம் மற்றும் முன்னேற்ற நிர்வாகத்தை ஒன்றிணைத்தல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள்.

(iii) கருத்திட்டங்களை மதிப்பீடு செய்தல், கருத்திட்டங்களிலும் நிகழ்ச்சித் திட்டங்களிலும் பயன் விளைவுகளை மதிப்பீடு செய்தல், செலவினங்களுடன் தொடர்புடையதாக பயன் விளைவுகளைப் பகுப்பாய்வு செய்தல்.

***நான்காவது வினாத்தாள்*.-** தாபன ஒழுங்குவிதிகள் மற்றும் அரச துறையின் நிதி முறைமைகள் :

(i) அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள், தொகுதி I (x ஆம் அத்தியாயம் தவிர்ந்ததாக)

(ii) தாபன விதிக்கோவையின் அத்தியாயம் I, II, III, IV,V,VI, VII, IX, XI, XII, XV, XXIII, XXV, XXVI, XXVII, XXIII, XXIX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கடமை ஒழுங்குவிதிகள், தொகுதி I இன் I முதல் VII வரையிலான அத்தியாயங்கள்

(iii) இலங்கையின் நிதி நிருவாகம்:- அரச முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரச நிதி சம்பந்தமான பாராளுமன்ற நிருவாகம், திரண்ட நிதியம் மற்றும் அதன் தொழிற்பாடு, ஒதுக்கீட்டின் குறிக்கோள்கள் மற்றும் ஒதுக்கீட்டு முறைமைகள், அரச வருமானம், நிதி அமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள், வொறண்ட் மற்றும் முற்பண அதிகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அவரது அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள், அரச செலவினக் குழு, அரச தொழில் முயற்சிகள் குழு.

(iv) கணக்கு உத்தியோகத்தர்கள், பிரதான கணக்கு உத்தியோகத்தர்கள் மற்றும் அரச வருமானங்கள் பற்றிய கணக்கு உத்தியோகத்தர்களையே நியமித்தல், அவர்களது பொறுப்புக்கள் மற்றும் கடமைகள்.

(v) அரச வருமானங்களைத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், அமைப்புக்களின் குறிக்கோள்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றினை இனங்காணல், வருடாந்த வருமானம் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் இறுதி தீர்மானங்களை மேற்கொள்ளல், அனுமதிக்கப்பட்ட செலவின மதிப்பீடுகளில் மாற்றங்களை மேற்கொள்ளல், அரச துறையின் பணியாட்டொகுதி முகாமைத்துவம், குறைநிரப்பு மதிப்பீடுகள்.

(vi) அரசாங்க வழங்கல் ஒழுங்குவிதிகள்.- பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளைப் பெற்றுக்கொள்ளல், வழங்கல் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் தன்மை, நியமனம், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள். விலைமதிப்பீட்டு ஒழுங்குவிதிகள், வெளிநாட்டு உதவிகள் மீது நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களின் முகாமைத்துவம்.

***ஐந்தாவது வினாத்தாள்*.-** ஆங்கில மொழி.- திட்டமிடல், அபிவிருத்தி, திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் ஆகிய விடயங்களுடன் தொடர்புடையதான விண்ணப்பதாரர்களின் கல்வி மற்றும் தொழில்சார்

ஆங்கில மொழித் திறன் பற்றி அளவிடுவதற்காக ஆங்கில மொழி பற்றிய எழுத்துமூல பரீட்சை ஒன்று நடாத்தப்படும்.

இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் விடயப் பரப்பு

இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையானது பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

(i) அபிவிருத்தி திட்டமிடல் தொழில்நுட்ப முறைகள் (பாட எண்-06) - 100 புள்ளிகள்
(ii) அடிப்படைப் பெரும்பாக பொருளியல் (பாட எண்-07) - 100 புள்ளிகள்
(iii) நடைமுறை சர்வதேச பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அவற்றின்மூலம் இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் (பாட எண்-08) - 100 புள்ளிகள்

2. அனைத்துப் பாடங்களுக்கும் ஒரே முறையில் அல்லது தனித் தனியாக பல தடவைகளில் தோற்றுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அனுமதி உண்டு.

3. ஒவ்வொரு வினாத்தாளுக்குமான காலம் 03 மணித்தியாலங்கள்.

4. வினாத்தாளில் உள்ள சகல வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமானதாகும்.

5. சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு வினாத் தாளிலிருந்தும் 40% புள்ளிகளை அல்லது அதிலும் கூடுதலாக விண்ணப்பதாரர்கள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**பரீட்சை ஒழுங்கு விதிகள்**

(i) அபிவிருத்தி திட்டமிடல் நுட்பங்கள்

(அ) 'ஸ்வொட்' பகுப்பாய்வு
(ஆ) பிணக்கு மரம்
(இ) தர்க்க சட்டக பகுப்பாய்வு
(ஈ) செலவினம் - நன்மை பகுப்பாய்வு
(உ) செலுத்தல் முறைமை
(ஊ) தேறிய தற்போதைய பெறுமதி
(எ) உள்ளக நன்மை விகிதம்
(ஏ) நிழல் விலையினை பயன்படுத்தல்

(ii) அடிப்படைப் பெரும்பாக பொருளாதார விஞ்ஞானம்

(அ) தேறிய கணக்குகள்
(ஆ) பொருளாதார விருத்தி வேகம்
(இ) ஏற்றத்தாழ்வற்ற தேறிய வருமானம்
(ஈ) பெருக்க எதிர் விளைவுகள்
(உ) பண வீக்கம்
(ஊ) வட்டி வீதம்
(எ) அரச நிதிக் கொள்கைகள் பற்றிய அறிமுகம்
(ஏ) நிதிக் கொள்கைகள் பற்றிய அறிமுகம்
(ஐ) சந்தை சக்கரம்

(iii) நடைமுறை சர்வதேச பொருளாதார பிரச்சினைகள் மற்றும் அவற்றின் மூலம் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள்.

(அ) நடைமுறை சர்வதேச பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் அவற்றின் மூலம் இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படக் கூடிய தாக்கங்கள் (அந்தந்த சந்தர்ப்பங்களில் ஏற்படக்கூடிய உலகப் பொருளாதார நிலைகளுக்கு நடைமுறையில் பொருத்தமான தலைப்பின் ஊடாகப் பதிலழிக்க வேண்டி ஏற்படும்)

பீ. அபேசேகர,
திறைசேரியின் பிரதிச் செயலாளர்,
நிதி, திட்டமிடல் அமைச்சு.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 1,
2011, ஏப்பிறல் 08.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சை - 2010**

[ ]
அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் நகரம் மற்றும் நகர இலக்கம் :

கொழும்பு - 1
யாழ்ப்பாணம் - 2

[ ] நகரம் [ ] நகர இலக்கம்

(நகரம் ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் எழுதவும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

(விண்ணப்பித்த மொழி பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது)

விண்ணப்பிக்கும் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை :

முதலாவது - 1
இரண்டாவது - 2 [ ]

(வர்த்தமானியின் 02ஆம் பந்தியைப் பார்க்கவும். இரண்டு பரீட்சைகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.)

1. பெயர் :-

1.1 முதலெழுத்துக்கள் பின்னால் இடப்பட்டு முதலெழுத்துக் களுடன் பெயர் :....................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் உ-ம் SILVA B.A

1.2 முழுப் பெயர் (சிங்களத்தில், தமிழில்) :- ..............................

1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் எழுதவும்) :........................

2.1 அலுவலக முகவரி (சிங்களத்தில், தமிழில்) :......................

2.2 பிரவேசப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : ............

3. 3.1 பால் :

பெண் - 1
ஆண் - 2 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.2 பிறந்த திகதி :

வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ நாள் ☐☐

3.3 விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. வர்த்தமானி அறிவித்தலின் 10 ஆவது பந்தியின் கீழ் தோற்றும் பாடங்கள் :

(ஒரு விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பிக்கும் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையுடன் தொடர்புடைய 4(i) அல்லது 4(ii) இற்கு மாத்திரமே பூர்த்திசெய்தல் வேண்டும்.

(i) முதலாவது வினைத்திறன் காண் தடை

| பாடம் | பாட எண் |
|---|---|
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |

(ii) இரண்டாவது வினைத்திறன் காண் தடை

| பாடம் | பாட எண் |
|---|---|
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |

5. இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III இல் சேர்ந்த திகதி : ...........
(சரியாக கடமையினைப் பொறுப்பேற்ற திகதியினைக் குறிப்பிடுதல் வேண்டும்)

6. அரச மொழிகள் கொள்கைக் குறிக்கோள்களுடனான நுழைவாளர் ஒருவரா அல்லது புதிய நுழைவாளர் ஒருவரா ?

7. திணைக்களத்தின் பெயர் (பிரதேச செயலகம் ஒன்றாயின் அந்த அலுவலகத்தின் பெயர்)

8. பரீட்சைக்குத் தோற்றுவது முதலாவது தடவையாகவா? ............

9. பரீட்சைக்குத் தோற்றுவது முதலாவது தடவையாக அல்லாவிடில் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம்-

> பற்றுச்சீட்டினை கழன்று போகாமல் நன்றாக ஒட்டவும்.
> (பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்று வைத்திருத்தல் பிரயோசனமாக இருக்கும்)

10. மேலே குறிப்பிட்டுள்ள விடயங்கள் சரியானவைகள் என்பதையும் மேற்குறிப்பிடப்பட்ட மொழியில் பரீட்சைக்குத் தோற்ற எனக்கு உரித்துள்ளதென்பதையும் உறுதிமொழிகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு நான் இணங்குகின்றேன்.

...................,
(விண்ணப்பதாரியின் கையொப்பம்)

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரின் தமது பிரதேச தலைவரின் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிடல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் உத்தியோகத்தரொருவராகிய, எனக்கு தனிப்பட்ட முறையில் அறிமுகமுள்ள திரு/ திருமதி/ செல்வி ....................... ............. ஆம் திகதியன்று எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

பெயர் : ....................
பதவிப் பெயர்: .................
முகவரி : ...................

..................,
உறுதிப்படுத்துபவரின் பெயர்.

**திணைக்களத் தலைவரின் சான்றரை**

(i) மேலே தரப்பட்டுள்ள விபரங்களைப் பரீட்சித்துப் பார்த்தேன் எனவும் அவை சரியானவை எனவும்

(ii) விண்ணப்பதாரி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியான வர் எனவும்

உறுதிப்படுத்துகின்றேன்.

................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோக முத்திரையிடவும்).

பதவிப் பெயர் : .......
திகதி : ..........

4-276

---

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

இஸ்லாமிய சன்மார்க்க அஹதிய்யா, அல்குர்ஆன் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை - 2010

(பௌத்த தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குச் சமாந்தரமானது)

1. **ஒழுங்கு விதிகளும் பிரமாணங்களும்**.- மேற்படி பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2011 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் நடாத்தப்படும். பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டங்களும், இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ளன.

2. **பரீட்சை நிலையங்கள்**.- இணைப்பு 02 இல் கூறப்பட்டுள்ள நகரங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும்.

ஆயினும் ஏதாவதொரு பரீட்சை நிலையத்திற்குப் போதிய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதபோது குறித்த பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு அந்த நிலையத்திற்குரிய விண்ணப்பதாரிகள் அண்மையிலுள்ள வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றச் செய்யப்படுவர். பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் மாவட்டங்களும் நகரங்களும் உள்ளடக்கிய பட்டியல் இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. **ஊடக மொழி**.- இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். எனினும் ஒரு பரீட்சார்த்தி, தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் இவற்றுள் யாதேனும் ஒரு மொழி மூலம் மட்டுமே தோற்ற முடியும்.

4. **தகைமைகள்**.- இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஏதேனுமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4.1 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில், பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலையொன்றில் 10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களாயிருத்தல்.

அல்லது

4.2 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால், அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட தர அல்குர்ஆன் மத்ரஸா பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்த மாணவராயிருத்தல்.

அல்லது

4.3 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இஸ்லாம், அரபு ஆகிய பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களாயிருத்தல்.

**குறிப்பு**.- (1) இப்பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும், மேலே 4 ஆவது பிரவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளாரென அஹதிய்யாப் பாடசாலையின் அதிபர் அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அதிபர் அல்லது பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(2) பரீட்சார்த்தி ஒருவர் இப்பரீட்சைக்குப் பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலை அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அல்லது பாடசாலை அதிபர் மூலமே விண்ணப்பிக்க முடியும்.

5. பதிவு செய்யப்பட்ட சகல அஹதிய்யாப் பாடசாலைகள், மத்ரஸாக்கள் பாடசாலைகள் என்பவற்றிற்கு விண்ணப்பப் பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பப்பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் கிடைக்கப்பெறாத நிறுவனங்கள், பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு 2011.04.21 ஆந் திகதிக்கு முன் விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.-

5.1 விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியினைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவதோடு, மற்றைய பிரதியினைக் குறிப்பிட்ட நிறுவனத்தில் கோவைப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

5.2 விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2011.05.06 ஆந் திகதி ஆகும்.

5.3 விண்ணப்பப்படிவங்கள் தெளிவாகவும், பிழைகளின்றியும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும், இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்களும் நிராகரிக்கப்படும்.

5.4 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்:-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

(விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.)

5.5 விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இஸ்லாமிய சன்மார்க்க இறுதிச் சான்றிதழ் பரீட்சை 2010" எனவும், விண்ணப்பிக்கும் பரீட்சை நிலையமும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

5.6 விண்ணப்பங்களோடு எவ்வித சான்றிதழையும் இணைத்து அனுப்பக்கூடாது. அஹதிய்யாப் பாடசாலையின் அல்லது மத்ரஸாவின் அதிபர் அல்லது பாடசாலை அதிபர் விண்ணப்பதாரி குறித்த தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும்.

6. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. இரண்டாவது தடவை தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு கட்டணம் ரூபா 150 ஆகும். நூன சித்தி பெற்ற பரீட்சார்த்திகளுக்கு ஒரு பாடத்திற்கு ரூபா 50 ஆகும்.

6.1 **கட்டணம் செலுத்தும் முறை**.- உரிய தொகையை அஞ்சலகத்தில் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். (விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியொன்றினை வைத்திருத்தல் பயனுடையது.)

7. **அனுமதி அட்டைகள்**.- பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் உரிய அஹதிய்யா அதிபர், மத்ரஸா அதிபர், பாடசாலை அதிபர் மூலமாக விநியோகிக்கப்படும்.

7.1 ஏதாவதொரு பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் ஆரம்ப தினத்திலேயே பரீட்சை அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கத் தவறும்பட்சத்தில் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் குறித் தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலல்லாது வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற எத்தனிக்கும் பட்சத்தில் உரிய பரீட்சார்த்தியின் பரீட்சைக்குத் தோற்றும் தகைமை இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையிலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பம் அஹதிய்யாப் பாடசாலை அதிபர், மத்ரஸா அதிபர் பாடசாலை அதிபர், அரபுக்கல்லூரி அதிபர், வருடமொன்றிற்கு ரூபா 2,40,360 இற்கு மேல் திரட்டிய வருடாந்த சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரச சேவை உத்தியோகத்தர், மஸ்ஜிதுக்குப் பொறுப்பான இமாம் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு ஏழு (7) தினங்களுக்கு முன்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த, அஹதிய்யாப் பாடசாலை, குர்ஆன் மத்ரஸா பாடசாலை என்பவற்றின் அதிபர்கள் இது தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கீழ்வரும் விடயங்கள் தெரிவிக்கப்படுதல் வேண்டும் :-

(அ) பரீட்சையின் பெயர் :-----.
(ஆ) அஹதிய்யாப் பாடசாலை/ குர்ஆன் மத்ரஸா/ அரசாங்கப் பாடசாலையின் பெயர் :-----.
(இ) முழுப் பெயரும் விலாசமும் :-----.
(ஈ) விண்ணப்பித்த பரீட்சை நிலையம் :-----.
(உ) விண்ணப்பத்தை அனுப்பி வைத்த தபால் நிலையம் :-----.
(ஊ) பதிவு செய்த இலக்கமும் திகதியும் :-----.

8. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- சகல பரீட்சார்த்திகளும் தாம் பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும்.

9. **பரீட்சை முடிவுகளை வெளியிடலும், சித்திபெற்றமையைத் தீர்மானித்தலும்**.

9.1 இப்பரீட்சைக்குரிய பாடங்கள் நான்கு ஆகும். குறித்த நான்கு பாடங்களிலும் சித்தியடையும் பரீட்சார்த்திகள் மட்டும் இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர். ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்று ஒரு பாடத்தில் மட்டும் சித்தி பெறத்தவறுவோர் நூன சித்தி பெற்றவராகக் கருதப்படுவார். அவர்கள் அடுத்து வரும் மூன்று வருடத்திற்குள் நூன சித்திப் பாடத்திற்குத் தோற்றி சித்தி பெற்றால், பரீட்சையில் சித்தி பெற்றோராகக் கணிக்கப்படுவர். (இது 2007 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்.)

9.2 பரீட்சை முடிவுகளை வெளியிடல்.- பரீட்சை முடிவுகளைப் பற்றிய விபரங்கள் உரிய நிறுவனங்களது அதிபர்களுக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

10. **சான்றிதழ்**.- பரீட்சையில் சித்திபெறும் ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

11. **விடைத்தாள் மீள்பரிசோதனை**.- பரீட்சை முடிவுகள் வெளியாகி 30 நாட்களுக்குள் இத்திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் படிவங்கள் மூலம் குறிப்பிட்ட நிறுவனத்தின் அதிபர் விண்ணப்பஞ் செய்தால் விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். எனினும், இதற்கு உரிய கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சை முடிவுகளில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மாத்திரமே கட்டணம் மீளளிக்கப்படும். எக்காரணம் கொண்டும் விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதிக்கோ விடைப்பத்திரங்களைப் பார்வையிடுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கமைய நடந்து கொள்வதற்கு எல்லா விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டுள்ளதோடு, இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்களிருப்பின் அவை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிவுக்கேற்பத் தீர்மானிக்கப்படும்.

அநுர எதிரிசிங்ஹ,
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2011, மாச்சு 18 ஆந் திகதி.

**இணைப்பு - 1**

**பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டமும்**:- (2004 ஆம் ஆண்டு முதல் நடைபெறும் பரீட்சைகளுக்கானது) இப்பரீட்சையின் ஒவ்வொரு வினாத்தாள்களும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட நான்கு வினாப்பத்திரங்களையுடையதாகும்.

முதலாம் வினாப்பத்திரம்

1. **அகீதாவும், ஷரீஆவும் (இஸ்லாமிய கோட்பாடும் மூலாதாரங்களும்) அரபு மொழியும்**

1.1 அகீதா பொது விளக்கம் (அல் இலாஹிய்யாத், அந்நுபுவ்வத், அர்ரூஹானிய்யாத், அஸ்ஸம்இய்யாத்)

1.2 அகீதாவின் பிரிவுகள்
- * அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தின் அகீதா
- * ஏனைய அகீதாப் பிரிவுகளிற் சில ஜபரிய்யா, கதரிய்யா, முர்ஜியா முஃதஜிலா, ஷீஆ

1.3 தௌஹீதும், ஷிர்க்கும்
- * ஈமானும், குப்றும்
- * ரித்தத், நிபாக்
- * அல்குர்ஆன் அருளப்பட்டு தொகுக்கப்பட்ட வரலாறு
- * சட்ட மூலாதாரம் என்ற வகையில் அல்குர்ஆனின் பயன்பாடு
- * ஸுன்னாவின் தோற்றமும் தொகுக்கப்பட்ட வரலாறும்
- * சட்ட மூலதாரம் என்ற வகையில் ஸுன்னாவின் பயன்பாடு
- * ஹதீஸ் கலை வரலாறும் பிரதான முஹத்திஸ்களின் பங்களிப்புகளும்
- * இஜ்திஹாத் பற்றிய விளக்கம்
- * துணை மூலாதாரம் என்ற வகையில் இஜ்மா
- * துணை மூலாதாரம் என்ற வகையில் கியாஸ்
- * பிக்ஹுடைய வரலாறும் பிரதான இமாம்களும்

1.4 அறபு மொழி
- * உறுப்பமைய எழுதுதல்
- * சிறு வாக்கியங்களை எழுதுதல்
- * இஸ்லாம் பாடத்துடன் தொடர்புடைய அறபுச் சொற்களை எழுதுதல்
- * முக்கியமான ஸுறாக்களையும், ஆயத்துக்களையும், ஹதீஸ்களையும் பிழையின்றி எழுதுதல்.

**இரண்டாம் வினாப்பத்திரம்**

**2. அல் பிக்ஹுல் இஸ்லாமி (இஸ்லாமிய சட்டநெறி)**

2.1 இபாதத் பற்றிய விளக்கம்
- * இபாதத்தின் பிரிவுகள்
- * தஹாரத்

2.2 நஜீஸும் அதன் வகைகளும்
- * நஜீஸை சுத்தப்படுத்தும் முறை
- * நீரும் அதன் வகைகளும்
- * வுழு, தயம்மும், குளிப்பு பற்றிய நடைமுறை ஒழுங்குகள்

2.3 ஸகாத்
- * முக்கியத்துவம்
- * விதி முறைகள்
- * திரட்டலும் விநியோகமும்
- * ஸகாத் மூலம் வறுமைத்தணிப்பும், செல்வப்பங்கீடும்

2.4 நோன்பு
- * முக்கியத்துவம்
- * விதிமுறைகளும் பயனும்

2.5 ஹஜ்
- * முக்கியத்துவம்
- * விதிமுறைகளும் பயனும்

2.6 ஹஜ்: நிறைவேற்றும் முறை
- * பர்ளுகள், வாஜிபுகள், சுன்னத்துகள்
- * பர்ளான ஹஜ்ஜுக்கு மேலதிகமாக செய்யும் ஹஜ்கள்

2.7 இஸ்லாத்தின் உணவு, உடை, உறையுள் பற்றிய கண்ணோட்டமும் நடைமுறைகளும்

2.8 ஜிஹாத் பற்றிய விளக்கம்

2.9 குர்பானிகளும் அறுப்பு முறைகளும்

2.10 சத்தியம் செய்தலும் நேர்ச்சையும்

2.11 முஆமலாத் பற்றிய விளக்கம்
- * உழைப்பின் முக்கியத்துவம்
- * பிரதான கொடுக்கல் வாங்கல் (வியாபாரம்) ஏனைய கொடுக்கல் வாங்கல் (உ+ம்: இரவல், வாடகை)
- * வக்பு, வஸிய்யத், வராஸத் (பொதுச்சொத்து, உயில் சொத்து, வாரிசுச்சொத்து)

2.12 இஸ்லாத்தில் ஆண், பெண் நிலை
- * நிகாஹின் விதிமுறைகளும் பயனும்
- * குடும்ப வாழ்வு
- * கணவன்-மனைவி
- * பெற்றோர் - பிள்ளை உரிமைகளும், கடமைகளும் தலாக்கும் இத்தாவும்

2.13 ஜினாயத்
- * ஹுதூத், கிஸாஸ், தஃஸீர்

**மூன்றாம் வினாப்பத்திரம்**

**3. ஸீறாவும் தாரீகும்**

3.1 இஸ்லாத்துக்கு முந்திய அரபு நாட்டின் சமய சமூக நிலை

3.1.1 நபி (ஸல்) அவர்கள்

- ● நுபுவத்திற்கு முந்திய வாழ்க்கை
  - * குடும்பம், பரம்பரை
  - * இளமைப்பருவம்
  - * நற்குணம்
  - * திருமணம்
- ● நுபுவ்வத்துக்கும் ஹிஜ்ரத்திற்கும் இடையிலான வாழ்க்கை
  - * நுபுவ்வத் கிடைத்தல்
  - * இஸ்லாமிய பிரச்சாரங்களும் விளைவுகளும்
  - * மிஃராஜ்
  - * ஹிஜ்ரத்
- ● மதீனா வாழ்க்கை
  - * சமூக அரசியல் செயற்பாடு
  - * தற்காப்பு யுத்தங்களும், சமாதான உடன்படிக்கைகளும்
  - * இஸ்லாம் பூரணத்துவம் பெறல்.
  - * ஸஹாபாக்களின் அந்தஸ்தும் இஸ்லாத்திற்கான அவர்களது பங்களிப்பும்

* குலபாஉர்ராஷிதீன்கள் வரலாறும், அரசியல் பங்களிப்பும்
* உமையா, அப்பாசிய ஆட்சிக்காலம்
* பைத்துல் முகத்தஸ் - வரலாறு
* இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் பங்களிப்பும்
* முஸ்லிம்களின் அறிவியல் பங்களிப்பு
* பின்வருவோர் பற்றிய வரலாறு
  * இமாம் புகாரி (ரஹ்)
  * இமாம் ஷாபிஈ (ரஹ்)
  * இமாம் கஸ்ஸாலி (ரஹ்)
  * இமாம் அப்துல் காதி ஜீலானி (ரஹ்)
  * இமாம் ஷாதுலி (ரஹ்)

**நான்காம் வினாப்பத்திரம்**

**4. அக்லாக் - (இஸ்லாமிய ஒழுக்கவியல்)**

4.1 அக்லாக் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம்

* அக்லாக் பற்றிய விளக்கம்
* ஈமானுக்கும் அக்லாக்குக்கும் இடையிலான தொடர்பு
* அக்லாக்குக்கும் இபாதத்திற்கும் இடையிலான தொடர்பு
* உளத்தூய்மை (இஃலாஸ்)

4.2 தக்வா

* வரஉ, ஸுஹ்த்
* முராகபா, முஹாஸபா
* ஷவ்க் (இறையன்பு)

4.3 ஈகை

* தியாகம்
* நன்றியுணர்வு
* பொறுமை - சகிப்புத்தன்மை - விட்டுக் கொடுத்தல் - மன்னித்தல்
* பணிவு
* நேரம் பேணுதல்
* அவையவங்களைப் பேணுதல்-நாவு, கண், காது, பாலுறுப்பு
* பிறரை மதித்தல்
* நீதியும் நேர்மையும்
* இளைஞர், யுவதிகளிடம் காணப்பட வேண்டிய சிறப்பான ஒழுக்கப் பண்புகள்
* ஏனைய சமயத்தவர்களுடன் இணங்கி வாழ்தல்

4.4 இஸ்லாமிய நீதிமுறை

**இணைப்பு - 2**

**குறித்த மாவட்டங்களிலே பரீட்சை நிலையங்கள் ஏற்படுத்தப்படவுள்ள நகரங்களும் அவற்றின் இலக்கங்களும்**

| நகரம் | நகர இல. | மாவட்ட இல. | நகரம் | நகர இல. | மாவட்ட இல. |
|---|---|---|---|---|---|
| **கொழும்பு மாவட்டம்** | | 01 | **கம்பஹா மாவட்டம்** | | 02 |
| கொழும்பு (மத்தி) | 01 | | திஹாரிய | 03 | |
| பம்பலப்பிட்டி | 02 | | மாபோலை | 04 | |
| | | | மல்வானை | 05 | |
| | | | நீர்கொழும்பு | 06 | |
| | | | கல்எலிய | 07 | |
| **களுத்துறை மாவட்டம்** | | 03 | **காலி மாவட்டம்** | | 04 |
| பாணந்துறை | 08 | | காலி | 11 | |
| களுத்துறை | 09 | | | | |
| அழுத்கம | 10 | | | | |
| **மாத்தறை மாவட்டம்** | | 05 | **தங்கல்லை மாவட்டம்** | | 06 |
| வெலிகமை | 12 | | ஹம்பாந்தோட்டை | 14 | |
| மாத்தறை | 13 | | | | |
| **கேகாலை மாவட்டம்** | | 07 | **குருநாகல் மாவட்டம்** | | 08 |
| மாவனல்லை | 15 | | குளியாபிட்டி | 18 | |
| வரகாபொலை | 16 | | குருநாகல் | 19 | |

| நகரம் | நகர இல. | மாவட்ட இல. | நகரம் | நகர இல. | மாவட்ட இல. |
|---|---|---|---|---|---|
| கன்னத்தோட்டை | 17 | | மெல்சிறிபுர | 20 | 08 |
| | | | பொல்கஹவெல | 21 | |
| | | | கெகுனாகொல்ல | 22 | |
| **புத்தளம் மாவட்டம்** | | 09 | **அநுராதபுர மாவட்டம்** | | 10 |
| நுரைச்சோலை | 23 | | அநுராதபுரம் | 26 | |
| புத்தளம் | 24 | | கெக்கிராவை | 27 | |
| சிலாபம் | 25 | | கலென்பிந்துனுவெவ | 28 | |
| **பொலன்னறுவை மாவட்டம்** | | 11 | **மாத்தளை மாவட்டம்** | | 12 |
| கதுறுவெல | 29 | | மாத்தளை | 30 | |
| **கண்டி மாவட்டம்** | | 13 | **நுவரெலியா மாவட்டம்** | | 14 |
| கண்டி | 31 | | நுவரெலியா | 35 | |
| நாவலப்பிட்டி | 32 | | | | |
| தெல்தொட்டை | 33 | | | | |
| கெலி ஓயா | 34 | | | | |
| **இரத்தினபுரி மாவட்டம்** | | 15 | **பதுளை மாவட்டம்** | | 16 |
| எஹலியகொடை | 36 | | பதுளை | 38 | |
| பலாங்கொடை | 37 | | வெலிமடை | 39 | |
| **மொனராகலை மாவட்டம்** | | 17 | **அம்பாறை மாவட்டம்** | | 18 |
| பிபிலை | 40 | | அக்கரைப்பற்று | 41 | |
| | | | பொத்துவில் | 42 | |
| | | | கல்முனை | 43 | |
| | | | சம்மாந்துறை | 44 | |
| | | | இறக்காமம் | 45 | |
| | | | நிந்தவூர் | 46 | |
| | | | ஒலுவில் | 47 | |
| **மட்டக்களப்பு மாவட்டம்** | | 19 | **திருகோணமலை மாவட்டம்** | | 20 |
| காத்தான்குடி | 48 | | மூதூர் | 51 | |
| ஏறாவூர் | 49 | | கிண்ணியா | 52 | |
| வாழைச்சேனை | 50 | | திருகோணமலை | 53 | |
| **வவுனியா மாவட்டம்** | | 21 | **மன்னார் மாவட்டம்** | | 22 |
| வவுனியா | 54 | | மன்னார் | 55 | |
| **முல்லைத்தீவு மாவட்டம்** | | 23 | **கிளிநொச்சி மாவட்டம்** | | 24 |
| முல்லைத்தீவு | 56 | | கிளிநொச்சி | 57 | |
| **யாழ்ப்பாண மாவட்டம்** | | 25 | | | |
| யாழ்ப்பாணம் | 58 | | | | |

*இணைப்பு 03*

***பரீட்சைப் பாடத்திட்டம்*** *- (2004 ஆம் ஆண்டு முதல் நடைபெறும் பரீட்சைகளுக்கானது)*

*இப்பரீட்சையின் ஒவ்வொரு வினாத்தாளும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட நான்கு வினாப்பத்திரங்களையுடையதாகும்.*

***1. முதலாம் வினாப்பத்திரம்.*** *- அகீதாவும் ஷரீஆவும் (இஸ்லாமிய கோட்பாடும் மூலாதாரங்களும்) அரபு மொழியும்*

*இவ்வினாப்பத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டது.*

*பகுதி I - அகவய வினாக்கள் (20 புள்ளிகள்)*

*இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாடுகளையும் பிரதான சட்டமூலாதாரங்களையும் இனங்காணல்.*

(அ) அர்கானுல் ஈமான்
(ஆ) அகீதாவின் விளக்கம்
(இ) அல்குர்ஆன்
(ஈ) அல்-ஹதீஸ்

*இப்பகுதியில் இடம்பெறும் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.*

1.1(அ) சுருக்க விடையெழுதுதல் - பத்து வினாக்கள் (10புள்ளிகள்)
(ஆ) பல்தேர்வு வினா - ஐந்து வினாக்கள் (05 புள்ளிகள்)
(இ) இடைவெளி நிரப்புதல் - ஐந்து வினாக்கள் (05 புள்ளிகள்)

*பகுதி II - கட்டமைப்பு வினாக்கள் (40 புள்ளிகள்)*

*தௌஹீதினையும் அதற்கெதிரான விடயங்களையும் துணை மூலாதாரங்களையும் தெளிவாக விளங்குதல்.*

(அ) தௌஹீதும் அதன் வகைகளும்
(ஆ) தௌஹீதுக்கு எதிரான கொள்கைகள்
(இ) இஜ்மாவும் கியாஸும்
(ஈ) இஜ்திஹாத்தும் முஜ்தஹித்களும்

*இப்பகுதியில் இடம்பெறும் நான்கு வினாக்களில் விரும்பிய இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு வினாவிலும் அ, ஆ, இ, ஈ என நான்கு பிரிவு வினாக்கள் இடம்பெறும். ஒரு பிரிவு வினாவிற்கு 05 புள்ளிகள் வீதம் (4 × 5 = 20) புள்ளிகள் வழங்கப்படும்.*

*பகுதி III - புறவய வினாக்கள் (40 புள்ளிகள்)*

*சட்ட மூலாதாரங்களின் பிரயோகங்களும் அவற்றைப்பின்பற்றி ஒழுகுதலும்.*

(அ) அல்குர்ஆன், அல்ஹதீஸ் வரலாறு
(ஆ) அல்குர்ஆனின் முக்கிய ஸூறாக்களையும், ஸூறாவுடன் தொடர்பான அரபுச்சொற்களையும் அரபியில் எழுதுதல்
(இ) பிரதான நான்கு மத்கபுகளும் அவற்றின் இமாம்களும்
(ஈ) இஜ்திஹாதும் ஏனைய முஜ்தஹித்களும்

*இப்பகுதியில் தரப்படும் நான்கு வினாக்களிலிருந்து விரும்பிய இரு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு வினாவும் அறிவு, திறன், மனப்பாங்குகளை மதிப்பிடக்கூடிய கட்டுரை வடிவில் விடையளிக்கப்பட வேண்டியனவாகும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.*

***2. இரண்டாம் வினாப்பத்திரம் - அல்பிக்ஹுல் இஸ்லாமி (இஸ்லாமிய சட்டநெறி)***

*இவ்வினாப்பத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டது.*

*பகுதி - I - அகவய வினாக்கள் - (20 புள்ளிகள்)*

*ஐம்பெரும் கடமைகளையும், ஏனைய அன்றாட நடவடிக்கைகளையும் இபாதத்தாக அமைத்துக்கொள்ளல்.*

(அ) தஹாரத்தும் நஜீஸும்
(ஆ) ஐம்பெரும் கடமைகள்
(இ) ஏனைய இபாதத்துக்கள்

*இப்பகுதியில் இடம்பெறும் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.*

1. (அ) பொது விடையெழுதுதல் -பத்து வினாக்கள் (10 புள்ளிகள்)
(ஆ) பல்தேர்வு வினா - ஐந்து வினாக்கள் (05 புள்ளிகள்)
(இ) இடைவெளி நிரப்புதல் - ஐந்து வினாக்கள் (05 புள்ளிகள்)

*பகுதி II - கட்டமைப்பு வினாக்கள் (40 புள்ளிகள்)*

*முஆமலாத், முனாககாத், ஜினாயாத் போன்ற செயற்பாடுகளை இபாதத்துக்களாக்கிக் கொள்ளல்.*

(அ) ஐம்பெரும் கடமைகள்
(ஆ) ஸுன்னத்தான இபாதத்துக்கள்
(இ) திருமணமும் குடும்ப வாழ்வும்
(ஈ) முஆமலாத்
(உ) ஜினாயாத்

*இப்பகுதியில் இடம்பெறும் நான்கு வினாக்களில் விரும்பிய இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு வினாவிலும் அ, ஆ, இ, ஈ என நான்கு பிரிவுகள் இடம்பெறும். ஒரு பிரிவு வினாவிற்கு 05 புள்ளிகள் வீதம் (4 × 5 = 20) புள்ளிகள் வழங்கப்படும்.*

*பகுதி III - கட்டுரை அமைப்பு வினாக்கள் (40 புள்ளிகள்)*

*பர்ளான, ஸுன்னத்தான இபாதத்துக்களின் பயன்களையும் தத்துவங்களையும் தெரிந்து செயற்படல்.*

(அ) ஐம்பெரும் கடமைகள்
(ஆ) தொழில்சார் நடவடிக்கைகள்
(இ) குற்றங்களும் தண்டனைகளும்
(ஈ) திருமணமும் குடும்பவாழ்வும்

*இப்பகுதியில் தரப்படும் நான்கு வினாக்களிலிருந்து விரும்பிய இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு வினாவும் அறிவு, திறன், மனப்பாங்குகளை மதிப்பிடக்கூடிய கட்டுரை வடிவில் விடையளிக்கப்பட வேண்டியனவாகும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.*

***3. மூன்றாம் வினாப்பத்திரம் - ஸீறாவும் தாரீகும் (நபி (ஸல்) வரலாறும் ஏனைய வரலாறும்)***

*இவ்வினாப்பத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டது.*

*பகுதி - I - அகவய வினாக்கள் - (20 புள்ளிகள்)*

நபி (ஸல்) அவர்களினதும், ஸஹாபாக்களினதும், ஏனைய வரலாறுகளையும் தெரிந்து கொள்ளல்.

(அ) ஜாஹிலியாக் கால சமய, சமூக நிலை
(ஆ) நபி (ஸல்) அவர்களது வாழ்க்கை வரலாறு
(இ) ஸஹாபாக்கள் இஸ்லாத்துக்கு ஆற்றிய பங்களிப்பு
(ஈ) உமையா, அப்பாஸியக் காலம்

இப்பகுதியில் இடம்பெறும் அனைத்து வினாக்களுக்கும் சகல பரீட்சார்திகளும் விடையளிப்பது அவசியம். இவ்வினா மூன்று பிரிவுகளைக் கொண்டது.

(அ) சுருக்க விடையெழுதுதல் - 10 வினாக்கள் - (10புள்ளிகள்)
(ஆ) பல்தேர்வு வினா - 05 வினாக்கள் - (05 புள்ளிகள்)
(இ) இடைவெளி நிரப்புதல் - 05 வினாக்கள் - (05 புள்ளிகள்)
(மொத்தப்புள்ளிகள் - 20)

பகுதி II - கட்டமைப்பு வினாக்கள் - 40 புள்ளிகள்
நபி (ஸல்) அவர்களினதும் அல்குலபாஉர் ராஷிதீன்களினதும் பங்களிப்புகளை அறிதல்

(அ) நபி (ஸல்) அவர்களின் மக்கா வாழ்வு
(ஆ) நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்வு
(இ) குலபாஉர் ராஷிதீன்கள் வரலாறு
(ஈ) பல்வேறு துறைசார் இமாம்களின் பங்களிப்பு

இப்பகுதியில் தரப்படும் நான்கு வினாக்களில் எவையேனும் இரு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவும் அ, ஆ, இ, ஈ என நான்கு பிரிவுகளைக் கொண்டது. ஒரு பிரிவுக்கு 05 புள்ளிகள் வீதம் $5 \times 4 = 20$ புள்ளிகள் வழங்கப்படும்.

($2 \times 20 = 40$ புள்ளிகள்)

பகுதி III - கட்டுரையமைப்பு வினாக்கள் - 40 புள்ளிகள்
நபி (ஸல்) அவர்கள் காட்டிய இஸ்லாமிய சமூக அரசியலின் அவசியத்தை உணரச் செய்தல்

(அ) நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு
(ஆ) அல்குலபாஉர் ராஷிதீன்களின் அரசியற் பங்களிப்பு
(இ) முஸ்லிம்களின் அறிவியற் பங்களிப்பு
(ஈ) இலங்கை முஸ்லிம்களின் வரலாறும், பங்களிப்பும்

இப்பகுதியில் இடம்பெறும் நான்கு வினாக்களிலிருந்து எவையேனும் இரு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் முழுமையாக 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

மொத்தம் $2 \times 20 = 40$ புள்ளிகள்

**நான்காம் வினாப்பத்திரம்**

**4. அல்-அக்லாக் (இஸ்லாமிய ஒழுக்கவியல்)**

இவ்வினாப்பத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டது.

பகுதி - 1 - நேர் (Objective) வினாக்கள் - புள்ளிகள் 20

(அ) ஒழுக்கவியல் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்
(ஆ) தக்வா
(இ) ஈகை
(ஈ) இஸ்லாமிய நீதி

இப்பகுதியில் இடம்பெறும் நான்கு வினாக்களுக்கும் அனைவரும் விடையளிப்பது அவசியம். ஒவ்வொரு வினாவுக்கும் ஐந்து புள்ளிகள் வீதம் இருபது (20) புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி 11 - கட்டமைப்பு வினாக்கள் - (40 புள்ளிகள்)

* ஈமானும் நற்குணங்களும்
* ஆன்மாவுடன் தொடர்புடைய பண்புகள்
* சமூக உறவுடன் தொடர்பான பண்புகள்
* நேரம் பேணல், அவையவங்களைப் பேணுதல்

இப்பகுதியில் தரப்படும் நான்கு வினாக்களில் இரண்டு வினாக்களுக்கு விடையளிப்பது அவசியம். ஒவ்வொரு வினாவும் அ, ஆ, இ, ஈ ஆகிய நான்கு பிரிவுகளைக் கொண்டவை. (ஒரு பகுதிக்கு 05 புள்ளிகள் வீதம் ($5 \times 4 = 20$) புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி 111 - கட்டுரை வடிவிலான வினாக்கள் - நாற்பது புள்ளிகள்

(அ) இஸ்லாமிய நற்பண்புகள் ஊடாக மனிதநேயம் வளர்ச்சி பெறல்
(ஆ) இபாதத்துகள் ஊடாக நற்பண்புகள் வெளிப்படல்
(இ) படைப்புகள் மீது அன்பு கொள்ளல்
(ஈ) இஸ்லாமிய நீதிமுறை
(உ) இளைஞர் யுவதிகளிடம் காணப்படவேண்டிய ஒழுக்கப் பண்புகள்

இப்பகுதியில் இடம்பெறும் நான்கு வினாக்களில் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு இருபது புள்ளிகள் வீதம் இரண்டு வினாக்களுக்கு நாற்பது புள்ளிகள் வழங்கப்படும்.

4-269

---

## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

(சமூக சேவைகள் அமைச்சு)

சமூகப்பணி இளமாணிப் பட்டக் கற்கைநெறி - 2011

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமானது, சமூக சேவைகள் அமைச்சின்கீழ் இயங்குகின்றதும், சமூகப்பணி இளமாணிப் பட்டக் கற்கைநெறியை வழங்குகின்றதுமான ஓர் நிறுவனம் ஆகும். இக்கற்கை நெறியானது ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படுகின்றது.

இந்நிறுவனமானது, 1978 ஆம் ஆண்டின் 25ஏ, 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின்கீழ் பட்டச் சான்றிதழ் வழங்கும் ஒரு நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இக்கற்கைநெறிக்கு, 2010 ஆம் ஆண்டின் க. பொ. த. உயர்தரப் பரீட்சையின் Z வெட்டுப் புள்ளியின் அடிப்படையில் பல்கலைக் கழகத்துக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடைய, சமூகப்பணி இளமாணிக் கற்கைநெறியை தொடர விரும்புகின்றவர்களிடம் இருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

**ஏன் நீங்கள் இக்கற்கை நெறியை தெரிவுசெய்ய வேண்டும் ? :**

தொழில்வாண்மையுள்ள சமூகப் பணியாளர்களுக்கு உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும், பாரிய கேள்வி காணப்படுவதுடன் அரச, அரச

சார்பற்ற மற்றும் தனியார் துறைகளிலும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் தொழில் வாய்ப்புக்கள் பல காணப்படுவதுமாகும்.

**ஏன் நீங்கள் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தை தெரிவுசெய்ய வேண்டும் ? :**

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமானது 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அரச உயர் கல்வி நிறுவனமாக அனுமதிக்கப் பட்டதொன்றாகும். சமூகப்பணித் தொழில்வாண்மை கல்விக்காக இலங்கையில் நிறுவப்பட்டுள்ள ஒரேயொரு அனுமதிக்கப்பட்ட நிறுவனமும் இதுவேயாகும்.

**இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கும் முறை.**- கீழே குறிப்பிட்ட மாதிரியின் அடிப்படையில் ஆங்கில மொழியில் சுயமாகத் தயாரிக்கப் பட்ட விண்ணப்பமானது–

"பதிவாளர்",
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
இல. 488ஏ, நாவல வீதி,
ராஜகிரிய.

எனும் விலாசத்திற்கு 2011.04.27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பப்பட வேண்டும். அத்துடன் ராஜகிரிய தபாலகத்தில் மாற்றக்கூடியவாறு "பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்" என்ற பெயருக்கு பெறப்பட்ட ரூபா 500 பெறுமதியான காசுக்கட்டளையை இணைப்பதோடு ரூபா 5 பெறுமதி யான முத்திரையொட்டிய, தங்களின் விலாசம் எழுதப்பட்ட கடித உறை ஒன்றையும் அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிஎஸ்டபிள்யு-2011" எனக் குறிப்பிடவும்.

மேலதிக விபரங்களுக்கு 011-2882506-7, 011-32119597 எனும் இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

மாதிரி விண்ணப்பப்படிவம்
(SPECIMEN APPLICATION FORM)

**Application for the Bachelor of Social Work Degree Programme - 2011**

1. Full Name :————.
2. Name with Initials :————.
(in Capital Letters)
3. National Identity Card Number :————.
4. Permanent Address :————.
5. Contact Tel. No. :————.
6. Sex :————.
7. Date of Birth :————.
8. Nationality :————.
9. Educational Qualifications :

(i) GCE (O/L) :–
Index No. :———, Year :———, Results :———.
(ii) GCE (A/L 2010) :
Index No. :———, Z Score :———,
Results :———.
District :———.
(iii) Highest Qualification/Examination in English (if any) :-
(iv) Other Qualifications :-————.

*Copies of the results sheets of the GCE (O/L) and GCE (A/L) examinations should be forwarded along with the application.

I certify that the information furnished by me is true and accurate. I am aware that my studentship can be cancelled, even after the selection, if the particulars are found to be incorrect.

————,
Signature.

Date :———.

4-348/1

---

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**
(சமூக சேவைகள் அமைச்சு)

**சமூகப்பணி இளமாணிப் பட்டக் கற்கைநெறி - 2011**

(சமூகப்பணி டிப்ளோமாதாரிகளிடமிருந்து இரண்டாம் ஆண்டிற்கான விண்ணப்பம் கோரல்)

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமானது, சமூகப்பணி டிப்ளோமா பெற்ற மாணவர்களிடம் இருந்து சமூகப் பணியில் இளமாணிக் கற்கைநெறியில் இரண்டாம் வருட அனுமதிக்காக விண்ணப்பங்களைக் கோருகின்றது.

**விண்ணப்பிப்பதற்கான தகைமை :**

(1) விண்ணப்பதாரி இலங்கை சமூகப்பணிக் கல்லூரி/தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திலிருந்து சமூகப்பணியில் டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

(2) ஆங்கிலத்தில் நடத்தப்படும் இப்பாடநெறியைப் பின்பற்ற ஆங்கிலத்தில் உயர் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(3) மூன்று வருடங்களுக்கு முழுநேரமாகப் இப்பாடநெறியைப் பின்பற்றக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

**எவ்வாறு விண்ணப்பிப்பது ? :**

முழுப்பெயர், முகவரி, மாவட்டம், தொலைபேசி இலக்கம், கல்வித் தகைமை (சமூகப்பணி டிப்ளோமா பெற்ற வருடத்தையும் குறிப்பிடவும்.) ஆங்கில மொழியில் பெற்ற உயர் தகைமை போன்ற விடயங்கள் உள்ளடங்கலாக ஆங்கில மொழி மூலம் தயாரிக்கப்பட்ட சுய விபரம் கொண்ட விண்ணப்பத்தை "பதிவாளர், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், இல. 488ஏ, நாவல வீதி, ராஜகிரிய" என்ற முகவரிக்கு 2011.04.27 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் மேல் வலது மூலையில் "சமூகப்பணி இளமாணி இரண்டாம் வருடத்திற்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடவும். அத்துடன்,

ரூபா 500 பெறுமதியான காசுக்கட்டளையை பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு ராஜகிரிய தபாலகத்தில் மாற்றக்கூடியவாறு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பிவைக்கவும். அத்துடன் ரூபா 5 பெறுமதியான முத்திரை ஒட்டிய சுயவிலாசம் எழுதிய கடித உறை ஒன்றையும் இணைக்கவும்.

மேற்குறிப்பிட்ட கற்கைநெறிக்கு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் மட்டுமே தெரிவுசெய்யப்படுவர்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் : 011-2882506-11/011-32119597.

பதிவாளர்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.

இல. 488ஏ, நாவல வீதி,
ராஜகிரிய.

4-348/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.